විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓஊ/சுற்றுநிருபம்/2009 දිනය / திகதி / Date 23.12.2009

**ஓய்வூதியச் சுற்றுநிருபம் 21/2009**

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/பிரதேசச் செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள்.

**அரச சேவை, மாகாண அரச சேவை அலுவலர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை வழக்கொழித்தல் மற்றும் அறவிடப்பட்ட பங்களிப்புப் பணத்தினை தக்க வைத்திருத்தல்**

01.01.2003 திகதியிலிருந்து தொழிற்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை 31.12.2006 திகதி தொடக்கம் வழக்கொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. திறைசேறியின் முகாமைச் சேவைகள் சுற்றுநிருபம் 18 மற்றும் 18 (1) விதிமுறைகளின் பிரகாரம் இவ் ஓய்வூதிய முறைக்காக பங்களிப்பாளரிடம் அறவிட்ட 8% தொகையும் அரச நிறுவனத்தின் பங்களிப்பான 12% தொகையும் மத்திய வங்கியின் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தில் வைப்பிலிடப்பட வேண்டியிருந்தது.

அவ்வாறு செய்யாது இது வரையும் உங்கள் நிறுவனத்தின் பல்வேறுப்பட்ட கணக்குகளில் தக்கவைத்துள்ள பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்காக அறவிடப்பட்டுள்ள பங்களிப்புப் பணம் தொடர்பாக 30.06.2010 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

1. அனைத்து மத்திய அரச நிறுவனங்களுக்கும் இது வரையிலும் தக்கவைத்துள்ள இத் தொகைகளை குறுக்குக் குறிப்புகள் (Cross Entries) மூலம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. அனைத்து உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிறுவனங்களினால் இது வரையிலும் தக்கவைத்துள்ள பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்காக அறவிட்ட பங்களிப்புத் தொகைகளை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் கணக்கில் இடுவதற்காக காசோலைகள் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

30.06.2010 ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறித்தவாறு செயற்படத்தவறும் நிறுவனத் தலைவர்களினால் அவ்வாறு இது வரையிலும் தக்க வைத்துள்ள இத்தொகைகள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியாக பொறுப்பு கூற வேண்டும் என்பதை மேலும் அறியத்தருகிறேன்.

கே.ஏ.திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்,

பிரதிகள்:-
1. திறைசேறியின் பிரதிப்பணிப்பாளர் - தகவலுக்காக
2. கணக்காய்வாளர் நாயகம் - தகவலுக்காக


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk